செப்பனியா

உலகளாவிய தண்டனை

இந்தப் புத்தகத்தை ஆக்கியோன் குறித்து.....

- செப்பனியா என்ற பெயரின் அர்த்தம் ‘‘தேவன் மறைக்கிறவர்’’ அல்லது ‘‘தேவன் பாதுகாக்கிறவர்’’
- 1:1ல் செப்பனியா தன்னை அறிமுகப்படுத்தியபோது ‘‘எஸ்கியாவின் குமாரனாகிய ஆமரியாவுக்குக் குமாரனான கெதலியா என்பவனுடைய மகனாகிய கூஷின் குமாரன்’’ என்று அறிமுகப்படுத்துகிறார்.
- ராஜாவாகிய மனாசேயின் இறுதிக்காலத்தில் இவர் பிறந்திருக்கவேண்டும்.
- தேவனுக்கு பயந்திருந்த எசேக்கியா ராஜாவின் கொள்ளுப்பேரனான (அரச வம்சத்தில் வந்த ஓரே தீர்க்கதரிசி) இவனது சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் எரேமியாவும், ஆபகூக்கும்.
- செப்பனியா யூதாவின் ராஜாவாகிய யோசியாவின் காலத்தில் கிமு 640 முதல் 609வரை தீர்க்கதரிசனம் உரைத்தவன் (1:1).
- செப்பனியா யோசியாவின் பாட்டனாகிய துன்மார்க்க ராஜாவாகிய மனாசேயின் காலத்திலும், மனாசேயின் மகனாகிய துன்மார்க்க ஆமோனின் காலத்திலும் வளர்ந்தவன்.
- செப்பனியா இளவயதுள்ளவனாகிய இருந்தபோது விக்கிர வழிபாடுகள், குழந்தைகளை பலிகொடுத்தல், நியாயமில்லாத கொலைகள் போன்றவை அவனது மனதில் ஆழமாக பதிந்திருக்க வேண்டும் (2இரா 21:16,2நாளா33:1-10).
- ஆனால் செப்பனியா தேவனுடைய மனிதனாக வளர்ந்து ஜனத்திற்கு முன்பாக நின்று அவர்கள் தேவனைவிட்டு தூரம்போய்விடாபடி தேவனுடைய செய்தியையும், அவரது தண்டனையையும் அறிவித்தான்.
    - அதிகாரங்கள் 3
    - வசனங்கள் 56

கர்த்தருடைய நாள்

- பழைய ஏற்பாட்டின் வேறு எந்தப் புத்தகத்தை காட்டிலும் இந்தப் புத்தகம் கர்த்தருடைய நாளைக் குறித்து பேசுகிறது.
- கர்த்தருடைய நாளில் தனது தேசமும், சுற்றியுள்ள தேசங்களும், முடிவில் முழு உலகமுமே அழிவுக்குள்ளாகப்போவதை கண்டான் (1:2,1:4,2:10)
- புறஜாதி தேசங்களின் அண்மைக்கால அழிவைக் குறித்தும் (2:13 நினிவேயின் வீழ்ச்சி கிமு612ல்) எதிர்கால அழிவைக குறித்தும்(3:8) தீர்க்கதரிசனம் உரைத்தான்.
- யூதாவை சுற்றியுள்ள தேசங்களின் மீதான தண்டனையை குறித்து அவன் அறிவித்தான்.
  - மேற்கில் - பெலிஸ்தியா
  - கிழக்கில் - மேவாப், அம்மோன்
  - தெற்கில் - எதியோப்பியா
  - வடக்கில் - அசீரியா
- எதிர்காலத்தில் அமையவிருக்கும் ஆயிர வருட அரசாட்சியின் மகிமையின் விளக்கத்தோடு இந்தப் புத்தகம் முடிவடைகிறது.

கர்த்தருடைய நாளைக் குறித்து செப்பனியா சொன்னது

1. அது சமீபித்திருக்கிறது 1:14
2. அது கோபாக்கினையின் நாள் 1:15
3. அது தேவனுடைய ஜனங்கள் மத்தியில் அவரது பிரசன்னம் காணப்படும் நாள் 3:17

இந்தப் புத்தகத்தின் முக்கிய பகுதிகள்

I. ஆக்கியோனும் தீர்க்கதரிசனத்தின் காலமும் 1:1

II. தண்டனைகள் குறித்த தீர்க்தரிசனங்கள் 1:2-3:8

A. யூதாவின் மீதான தண்டனை 1:2-18

B. மனந்திரும்ப அழைப்பு 2:1-3

C. புறஜாதி தேசங்கள் மீதான தண்டனை 2:4-15

1. மேற்கில் - பெலிஸ்தியா 2:4-7
2. கிழக்கில் - மேவாப், அம்மோன் 2:8-11
3. தெற்கில் - எதியோப்பியா 2:12
4. வடக்கில் - அசீரியா 2:13-15

D. எருசலேமின் மீதான தண்டனை 3:1-7

E. தேசங்களின் மீதான தண்டனை 3:8

III. ஆசீர்வாதங்கள் குறித்த தீர்க்கதரிசனம் 3:9-20

A. புறஜாதியாருக்கான எதிர்கால ஆசீர்வாதம் 3:9-10

B. யூதருக்கான எதிர்கால ஆசீர்வாதம் 3:11-20